Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO.276 /**2020**

**Depostitions of PW- 3 Witness for**

| | |
|---|---|
| Name | வெள்ளைச்சாமி |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of September 2023

Signature of Witness.

26.09.2023

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் எம்.பி.கே புதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் மில்லில் பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 பொற்செல்வி எனது தம்பி மகள் ஆவார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பு திருவில்லிபுத்தூர் பேருந்து நிறுத்தத்தில் வைத்து கையெழுத்து செய்து கொடுத்தேன். பொற்செல்வியின் செயின் திருடு போகிவிட்டது அதனால் தெரிந்த நபர்கள் இருந்தால் சாட்சிக்கு கையெழுத்து கேட்டார்கள் நான் போட்டுக் கொடுத்தேன். என்னுடன் முனியம்மாள் என்பவரும்

கையெழுத்து போட்டார். போலீசார் படம் வரைந்ததற்காக எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

போலீசாரிடம் கையெழுத்து செய்து கொடுத்த தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பொற்செல்வி எனக்கு மகள் முறை என்றால் சரிதான். முனியம்மாளுக்கு பொற்செல்வி என்ன முறை என்றால் அவருக்கும் மகள் முறை தான். நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் எனது மகள் பொற்செல்வி கேட்டு கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு பேருந்து நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.